2023 அக்டோபர் 11]

223—

ரவுண்டானா

***14335—முனைவர் த. இனிகோ இருதயராஜ்:**

மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திருச்சிராப்பள்ளி (கிழக்கு) தொகுதிக்குட்பட்ட திருச்சிராப்பள்ளி–காரைக்குடி தேசிய நெடுஞ்சாலை மற்றும் வடுகப்பட்டி–எல்.ஐ.சி. காலனி சாலை சந்திக்கும் இடத்தில் ரவுண்டானா அமைக்க அரசு முன்வருமா?

முற்பகல் 10–35

மாண்புமிகு திரு. எ.வ. வேலு, பொதுப் பணித் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

திருச்சி புறவழிச்சாலை என்பது தேசிய நெடுஞ்சாலை ஆணையத்திற்குச் சொந்தமான சாலையாகும். அதில், கி.மீ. 131/100–ன்கீழே ரவுண்டானா ஒன்று அமைக்க வேண்டுமென்று நம்முடைய சட்டமன்ற உறுப்பினர் அவர்கள் கேட்டிருக்கிறார்கள். தற்போதைய போக்குவரத்து செறிவின்படி ரவுண்டானா அமைப்பதற்கான சாத்தியக்கூறுகள் மிகக் குறைவாக இருக்கின்றன. இருப்பினும் திருச்சியினுடைய புறவழிச் சாலைப் பணிகள் 99 சதவீதம் நடைபெற்றுக்கொண்டிருக்கின்றன. அது முழுமையடைந்த பின்னர்தான், அந்தச் சாலையை பயன்பாட்டிற்குக் கொண்டுவர முடியும். அவ்வாறு பயன்பாட்டிற்குக் கொண்டுவருகிறபொழுது, போக்குவரத்துச் செறிவு அதிகமாகும் என்பதால், போக்குவரத்துச் செறிவினை ஆய்வு செய்து, அந்த அடிப்படையிலே roundtana *அமைப்பதாக இந்திய தேசிய நெடுஞ்சாலை ஆணையம் துறைக்குத் தெரிவித்திருக்கிறது. எனவே, போக்குவரத்துச் செறிவினைப் பொறுத்துதான்* roundtana *கட்டுவது குறித்த முடிவு செய்யப்படும்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் முனைவர் த. இனிகோ இருதயராஜ் அவர்கள்.*

முனைவர் த. இனிகோ இருதயராஜ்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருச்சி கிழக்கு சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட கே. சாத்தனூர், வடுகப்பட்டி பகுதிகளிலே*

சுமார் 2 ஆயிரத்துக்கும் அதிகமான மக்கள் வாழ்ந்து கொண்டிருக்கின்றனர். இப்பகுதிகளிலிருந்து 2 கிலோ மீட்டர் தூரத்தில், பஞ்சப்பூர் பகுதியில் மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் திருச்சிக்கு 349 கோடி ரூபாய் நிதி ஒதுக்கி பிரம்மாண்டமான புதிய மத்திய பேருந்து நிலையம் அமைத்துத் தந்துள்ளார்கள். இப்பகுதி வளர்ந்து வருகிற பகுதி.

திருச்சி–காரைக்குடி தேசிய நெடுஞ்சாலை என்பது NHAI–க்கு சொந்தமானதாக இருக்கிறது. Roundtana அமைப்பதற்கான இடமும் அந்தப் பகுதியிலே NHAI–க்கு சொந்தமாகவே உள்ளது. கே.சாத்தனூர், LIC காலனி, வடுகப்பட்டி இந்தப் பகுதியிலே இருக்கக்கூடிய மக்கள் தங்கள் அன்றாடப் பணிகளை மேற்கொள்ள திருச்சி–காரைக்குடி தேசிய நெடுஞ்சாலையைத்தான் கடந்து செல்ல வேண்டி இருக்கின்ற காரணத்தினால், அங்கு அடிக்கடி accidents நடக்கின்றன. இப்போதுதான் நாங்கள் அங்கு வேகத்தடையையும், light–ஐயும் போட்டு ஓரளவிற்கு accidents நிகழாமல் தடுத்திருக்கிறோம். NHAI அதிகாரிகளைக் கேட்டால், மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள் பரிந்துரை செய்தால் நிச்சயமாகப் பரிசீலிக்கப்படும் என்று சொல்லி உள்ளார்கள். நானும் மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்குக் கடிதம் கொடுத்திருக்கிறேன். எனவே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கருணைகூர்ந்து, அப்பகுதி மக்கள் சாலையைக் கடக்க ஏதுவாக roundtana அமைத்து, அப்பகுதி மக்களுடைய நீண்டநாள் கோரிக்கையை நிறைவேற்றித்தர வேண்டுமென்று தங்களின் வாயிலாகக் கேட்டு அமர்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. எ.வ. வேலு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் முனைவர் த. இனிகோ இருதயராஜ் அவர்கள் கொடுத்த கடிதத்தின் அடிப்படையிலே, சம்பந்தப்பட்ட நெடுஞ்சாலைத் துறையினுடைய மண்டல அதிகாரியை நான் அழைத்துப் பேசிய அடிப்படையிலேதான், நான் கூறிய இந்த விவரங்களை எனக்கு கொடுத்திருக்கிறார்கள். அந்தப் புறவழிச் சாலை முழுமையடைந்தவுடனேயே, அங்குள்ள போக்குவரத்துச் செறிவைப் பொறுத்து, இந்த roundtana அமைக்கலாம் என்று சொல்லியிருக்கிறார்கள். இருந்தாலும் மாண்புமிகு உறுப்பினர் முனைவர் த. இனிகோ இருதயராஜ்

2023 அக்டோபர் 11]
அவர்கள் சொன்னதன் அடிப்படையிலே, நெடுஞ்சாலைத் துறையினுடைய மண்டல அதிகாரி அவர்களுக்கு அழுத்தம் கொடுக்கிற அளவிற்கு நான் அவர்களிடம் மீண்டும் கடிதத் தொடர்புகொள்வேன் என்பதை இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் முனைவர் த. இனிகோ இருதயராஜ் அவர்கள்.*

முனைவர் த. இனிகோ இருதயராஜ்: மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்களுடைய பதிலுக்கு என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். அதேபோலவே, என்னுடைய தொகுதிக்குட்பட்ட மேலசிந்தாமணி, பழைய கரூர் ரோட்டில், சிதம்பரம் மஹால் அருகில் ஒரு கார் மட்டுமே செல்லக்கூடிய வகையில் ஒரு குறுகிய பாலம், அதாவது சுமார் 100 ஆண்டுகள் பழமை வாய்ந்த வாய்க்கால் பாலம் உள்ளது. அந்தப் பாலத்தை அகலப்படுத்தி சிந்தாமணிப் பகுதியிலே ஏற்படுகின்ற போக்குவரத்து நெரிசலைச் சீர்செய்ய வேண்டுமென்று சட்டமன்றத்திலே கோரிக்கை வைத்தேன், கடிதமும் எழுதியிருந்தேன். மாண்புமிகு அமைச்சர் அவர்களும் நிறைவேற்றித் தருவதாக பதில் கூறினார்கள். எனவே, பழைய கரூர் ரோட்டிலே உள்ள அந்த ஆக்கிரமிப்புகள் எல்லாம் அகற்றப்பட்டு எப்போது அந்தப் பாலம் கட்டப்பட்டு அகலமான பாதை கிடைக்குமென்பதைத் தங்களின் வாயிலாக அறிய விரும்புகின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. எ.வ. வேலு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு நகராட்சி நிர்வாகத் துறையினுடைய அமைச்சர் அவர்கள் ஏற்கெனவே இதுசம்பந்தமாக என்னிடத்தில் சொல்லியிருக்கிறார்கள். சம்பந்தப்பட்ட கண்காணிப்புப் பொறியாளரிடம் இதைத் தெரிவித்து, இதற்கு முழுமையான ஒரு திட்ட அறிக்கை தேவை என்பதைச் சொல்லியிருக்கிறேன். அந்தப் பணியிலே அவர்கள் ஈடுபட்டிருக்கிறார்கள். அது முழுமையடைந்தால், அடுத்த நிதியாண்டிலே மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய அனுமதியோடு, இந்தப் பணியைச் சேர்ப்பதற்கு எங்கள் துறையின் சார்பாக ஏற்பாடு செய்யப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜி.கே. மணி அவர்கள்.

திரு. ஜி.கே. மணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, காவிரி ஆற்றின் குறுக்கே பாலம் கட்டுவது குறித்து, 'உங்கள் தொகுதியில் முதலமைச்சர்' திட்டத்தின்கீழ் ஒரு கோரிக்கை வைத்தேன். அதை ஏற்றுக்கொண்ட மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் ரூபாய் 250 கோடி மதிப்பீட்டில் பாலம் கட்டப்படும் என்ற ஒரு மகத்தான அறிவிப்பை வெளியிட்டார்கள். அதற்காக பொதுமக்களின் சார்பில் நான் அப்பொழுதே நன்றியைத் தெரிவித்துக்கொண்டேன். இந்தப் பாலம் என்பது தருமபுரி, கிருஷ்ணகிரி, சேலம், ஈரோடு, கோயம்புத்தூர் ஆகிய மாவட்டங்களை இணைப்பது என்பது உண்மை. அதேநேரத்தில் கொச்சின் துறைமுகத்திலிருந்து பாலக்காடு, கோயம்புத்தூர் மாவட்டம், ஈரோடு மாவட்டம், கொளத்தூர் வழியாக ஆற்றைக் கடந்து பெண்ணாகரம், பாலக்கோடு, ஓசூர், பெங்களூரு, மும்பையை இணைக்கக்கூடிய தேசிய நெடுஞ்சாலைகளோடு இணைத்துவிட்டால், அது போக்குவரத்திற்கு மிக எளிதாக இருப்பதோடு, போக்குவரத்து நேரமும் குறையும், எரிபொருளும் சிக்கனமாகும் மற்றும் தொழில் வளர்ச்சிக்கு ஏதுவாகவும் இருக்கும்; இந்த அடிப்படையில் இது ஒரு நல்ல திட்டம். இதை அரசு நிறைவேற்ற வேண்டும் என்ற வேண்டுகோளை வைக்கிற அதேநேரத்தில், மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அறிவித்திருக்கிற இந்தத் திட்டத்தை, நல்ல மனம் படைத்த, எதையும் எப்படியும் செய்யும் ஆற்றல்மிக்க மாண்புமிகு அமைச்சர் அவர்கள் விரைந்து செய்து முடிப்பார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 10–40

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. எ.வ. வேலு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாட்டினுடைய முதலமைச்சர் மாண்புமிகு தளபதியார் அவர்கள் ஆட்சிப் பொறுப்பை ஏற்றவுடனேயே உயர்மட்டப் பாலம் கட்டுவதற்கு முன்னுரிமை அளிக்க வேண்டுமென்று கூறினார்கள். தரைப் பாலங்களைப் பொறுத்தவரையில், வெள்ளப்பெருக்கு ஏற்படுகின்ற காலங்களில்,

2023 அக்டோபர் 11]

அதன் வழியாக மக்கள் ஓர் ஊரிலிருந்து மற்றோர் ஊருக்குச் செல்லவே முடியாத நிலை ஒருகாலத்தில் இருந்தது. மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் ஆட்சிப் பொறுப்பேற்றவுடனே, தமிழ்நாட்டைப் பொறுத்தவரையில், 1,281 தரைப் பாலங்களை உயர்மட்டப் பாலங்களாக தரமுயர்த்த வேண்டும் என்று ஆணை பிறப்பித்தார்கள். அந்த அடிப்படையில், 2021–2022 ஆம் ஆண்டில் 693 பாலங்கள், 2022–2023 ஆம் ஆண்டில் 66 பாலங்கள், 2023–2024 ஆம் ஆண்டில் 277 பாலங்கள் என இந்த 3 நிதியாண்டுகளில் ஏறத்தாழ 1,036 பாலங்களைக் கட்ட இந்த அரசின் சார்பாக முடிவு செய்யப்பட்டது. நிதி நிலைமை எப்படியிருக்கிறது என்பது பற்றி மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர்கள் அத்தனை பேருக்கும் தெரியும். இருந்தாலும், பாலம் கட்ட வேண்டும் என்ற மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய ஆணையை ஏற்று, துறையின் சார்பாக அதற்கான திட்ட மதிப்பீடுகளெல்லாம் தயாரிக்கப்பட்டு, டெண்டர் விடப்பட்டு, 667 பாலங்கள் கட்டி முடிக்கப்பட்டுள்ளன. எஞ்சியிருக்கிற 409 பாலங்களைக் கட்டும் பணிகள் தற்போது நடைபெற்று வருகின்றன. இந்நிலையில், அடுத்த ஆண்டு 248 பாலங்கள் கட்டுவதற்கு திட்ட மதிப்பீடுகள் தயார் செய்யப்பட்டு வருகின்றன. இந்த அடிப்படையில்தான், மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தருமபுரிக்குச் சென்றபோது, மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் அவர்களுடைய கோரிக்கையை ஏற்று, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கூறிய அந்தப் பாலம் கட்டப்படும் என்று அறிவித்தார்கள்.

அந்தப் பாலம், சேலம் மாவட்டத்தையும், தருமபுரி மாவட்டத்தையும் இணைக்கிற ஒரு பாலம் ஆகும்; அது தேவையானதும்கூட. சேலம் மாவட்டம் கோட்டையூரையும், தருமபுரி மாவட்டத்திலுள்ள ஒட்டனூரையும் இணைக்கின்ற பாலம் ஆகும். ஒட்டனூர் என்ற ஊர் மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிந்த ஊர். அதற்குப் பக்கத்தில்தான் அவருடைய சொந்த ஊர் இருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், அந்த இரண்டு ஊர்களையும் இணைக்கின்ற வகையில் பாலம் அமைக்க வேண்டும் என்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்களிடம் வைத்த கோரிக்கையினை ஏற்று, அந்தப் பாலம் கட்டப்படும் என்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அறிவித்தார்கள். மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அறிவித்தவுடனேயே, துறையின் சார்பாக அதற்கான ஏற்பாடுகளைச் செய்யலாம் என்று முடிவு செய்யப்பட்டு, விரிவான திட்ட அறிக்கை தயார் செய்வதற்காக

டெண்டர் விடப்பட்டு, 2 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு, திட்ட அறிக்கை தயாரிக்கும் பணி முன்னுரிமை அடிப்படையில் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

அந்தப் பாலம் முழுக்க முழுக்க ஆற்றைக் கடந்து செல்கின்ற பாலம் ஆகும். எனவே, அந்தப் பாலத்தை அமைக்க வேண்டும் என்று சொன்னால், நீர்வளத் துறையிடமிருந்தும், வனத் துறையிடமிருந்தும் NOC–தடையில்லா சான்று பெற வேண்டும். மேற்படி துறைகளிடமிருந்து NOC பெற வேண்டும் என்று முடிவு செய்யப்பட்டு, அத்துறைகளுக்கு உரிய கருத்துருக்கள் அனுப்பப்பட்டுள்ளன; அவையும் வரவிருக்கின்றன. திட்ட அறிக்கை தயார் செய்யப்பட்டவுடனேயே, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அறிவித்த பாலம் என்கிற அடிப்படையில், அதற்கு முன்னுரிமை அளித்து, அவரிடத்தில் அனுமதி பெற்று, வரவிருக்கும் நிதியாண்டில் அப்பாலத்தை கட்டுவதற்கு துறையின் சார்பாக முயற்சி எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் வை. முத்துராஜா அவர்கள்.

டாக்டர் வை. முத்துராஜா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, புதுக்கோட்டை நகராட்சி பழைய பேருந்து நிலையம்–அறந்தாங்கி சாலையை நான்கு வழிச் சாலையாகத் தரமுயர்த்திக் கொடுத்த மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கும், மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்களுக்கும் எனது நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

புதுக்கோட்டை அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனையிலிருந்து பிருந்தாவனம், அண்ணா சாலை, TVS corner வழியாக மாலையீடு வரை செல்லும் சாலை, நகரத்தின் மையப் பகுதியில் உள்ளது. காலை மற்றும் மாலை நேரங்களில் பணிக்குச் செல்லும் அரசு ஊழியர்கள், பொதுமக்கள், பள்ளி மற்றும் கல்லூரி மாணவர்கள் அதிகளவில் இந்த சாலையைப் பயன்படுத்துகிற சூழ்நிலை உள்ளது. ஆகவே, போக்குவரத்து நெரிசல் அதிகமாக ஏற்படுகிறது. இதைத் தவிர்க்கும் விதமாக, மருத்துவக் கல்லூரிக்கு செல்லும் ஆம்புலன்ஸ் மற்றும் பொதுமக்களின் வாகனங்கள், எந்தவித தடையுமின்றி செல்ல ஏதுவாக, மேற்கண்ட சாலையை நான்குவழிச் சாலையாக தரமுயர்த்தித் தருமாறு மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கின்றேன்.

2023 அக்டோபர் 11]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. எ.வ. வேலு: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பொதுவாக தேசிய நெடுஞ்சாலைகள் என்று சொல்லப்படுகின்ற சாலைகளெல்லாம், 7 மீட்டர் மாநிலச் சாலைகளை எடுத்து, 10 மீட்டர் சாலைகளாக்கப்பட்டு,* tollgate *போடுவதையெல்லாம் நாம் பார்க்கிறோம்.* Tollgate*-ஐ எடுத்துவிட வேண்டும் என்று இந்த அரசு பலமுறை கடிதம் எழுதியிருக்கிறது.*

மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் ஆட்சிப் பொறுப்பேற்றவுடன், தமிழ்நாட்டில் இருக்கிற சாலைகளையெல்லாம் நான்கு வழிச் சாலையாகத் தரமுயர்த்துவதற்கு முன்னுரிமை அளிக்க வேண்டும் என்று கூறினார்கள். இந்த அரசு புதிதாக ஆட்சிப் பொறுப்பேற்றவுடனேயே, முதலமைச்சர் சாலை மேம்பாட்டுத் திட்டம் என்கிற திட்டத்தை மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அறிவித்தார்கள். அந்த அடிப்படையில்தான், நம்முடைய மாநில நெடுஞ்சாலைகளெல்லாம் நான்கு வழிச் சாலைகளாகத் தரமுயர்த்தப்படுகின்றன; அங்கு tollgate *எல்லாம் போடுவதில்லை. அதுபோன்றுதான், மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் டாக்டர் முத்துராஜா அவர்களின் தொகுதியிலுள்ள சாலையை நான்கு வழிச் சாலையாகத் தரமுயர்த்திக் கொடுத்ததற்கு நன்றி தெரிவித்தார்கள். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், அந்தச் சாலை பள்ளி, கல்லூரி மாணாக்கர்கள் செல்லும் சாலை என்று கூறினார்கள். பொதுவாக, நகரப் பகுதிகளில் இரண்டுவிதமான சாலைகள் உள்ளன. ஒன்று, நகராட்சிக்குச் சொந்தமான நகராட்சிச் சாலைகளாகும்; மற்றொன்று மாநிலச் சாலைகளாகும். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கூறுகின்ற அந்தச் சாலை எந்தச் சாலை என்பதை ஆய்வு செய்து, போக்குவரத்துச் செறிவு இருக்குமேயானால், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய அனுமதியுடன், அடுத்து வருகின்ற நிதியாண்டில் துறையின் சார்பாக பணிகள் மேற்கொள்ளப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

முற்பகல் 10–45

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.ஆர். ஜெயராம் அவர்கள்.*

[2023 அக்டோபர் 11

திரு. கே.ஆர். ஜெயராம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கோயம்புத்தூர் மாவட்டம், சிங்காநல்லூர் தொகுதி, திருச்சி சாலையில் Stock Exchange முதல் ஒண்டிபுதூர் வரையில் ஒரு பாலமும், அதேபோல் கவுண்டம்பாளையம் தொகுதிக்குட்பட்ட சக்தி சாலையில் GKS நகர் முதல் துடியலூர் சந்திப்பு வரையில் மற்றொரு பாலமும் அதேபோல், கோவை வடக்கு தொகுதியிலுள்ள மேட்டுப்பாளையம் சாலை, சாய்பாபா காலனி சந்திப்பிலும் ஓர் உயர் மட்ட பாலமும் அமைப்பதற்காக, கடந்த 2022 ஆம் ஆண்டு ஜூன் மாதம் ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டு, இதுவரையிலும் பணிகள் துவங்கப்படவில்லை. இந்தப் பகுதியில் மேற்படி மூன்று சாலைகளிலும் Metro Rail திட்டம் வருவதற்கான ஆய்வுப் பணிகள் நடைபெறுவதாகத் தெரிய வருகிறது. இந்த மூன்று மேம்பாலப் பணிகளும் கைவிடப்படுவதாக பொது மக்கள் மத்தியில் அச்சம் நிலவி வருகிறது. இதுசம்பந்தமாக மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களும், மாவட்டத்தினுடைய பொறுப்பு அமைச்சர் அவர்களும் ஆய்வுக் கூட்டம் நடத்தினார்கள். ஆகவே, மூன்று சாலைகளிலுள்ள கடுமையான போக்குவரத்து நெரிசலைக் குறைக்க மூன்று பாலங்களையும் கட்ட இந்த அரசு முன்வருமா என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. எ.வ. வேலு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கெனவே உரிய அனுமதி பெற்று, தேசிய நெடுஞ்சாலை ஆணையத்தின் மூலமாக கட்டப்பட வேண்டுமென்று tender விடுகிற நிலையில், தமிழ்நாடு அரசின் சார்பாக Metro train விடுவது என்று ஓர் அறிவிப்பு வெளியிடப்பட்டது. அந்த அடிப்படையில் இரண்டு துறைகளின் பொறியாளர்களை அழைத்துப் பேசுகிறபோது, 'Metro train-தான் வேண்டும்' என்று ஒரு சிலரும், 'இல்லை, இல்லை ஏற்கெனவே திட்டமிடப்பட்ட பாலங்கள் கட்டப்பட வேண்டும்' என்று ஒரு சிலரும், இரு வேறு கருத்துகளைச் சொன்னார்கள். அந்த அடிப்படையில்தான் அரசின் சார்பாக, மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களிடத்தில் 'பொது மக்களுடைய எண்ணங்கள், கோரிக்கைகள் என்னவென்பதைக் கேளுங்கள்' என்று சொல்லியிருக்கிறோம். மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் பல்வேறு தரப்பினரை அழைத்துப் பேசியபோது,

2023 அக்டோபர் 11]

பெரும்பான்மையானவர்கள் Metro train வருகிறபோது வரட்டும்; அந்தப் பாலத்தை கட்ட வேண்டுமென்று சொல்கிறார்கள். அதனடிப்படையில் மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் அந்தக் கருத்துருவை இங்கே அனுப்பினார்கள். அதற்குப் பின்னால், ஒன்றிய அரசாங்கத்திற்கு நாங்கள் தொடர்ந்து கடிதம் எழுதியதன் அடிப்படையில், 2 பாலங்களுக்கு அனுமதி தந்து, சென்ற வாரம்தான் tender விடப்பட்டிருக்கிறது. Tender முடிந்தவுடனேயே, ஒப்பந்தம் போடப்பட்டு, அந்த இரண்டு பாலங்கள் கட்டப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் வாயிலாக மாண்புமிகு உறுப்பினருக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.ஏ. செங்கோட்டையன் அவர்கள்.*

திரு. கே.ஏ. செங்கோட்டையன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சென்ற நிதியாண்டில் மாண்புமிகு அமைச்சர் அவர்களிடத்தில் நான்கு வழிச் சாலைகள் குறித்து கேட்டேன். ஈரோட்டிலிருந்து கோபிசெட்டிப்பாளையம் வரை பணிகள் நிறைவடைந்திருக்கின்றன. கோபி நகரத்தைப் பொறுத்தவரையிலும் குறுகிய சாலைகளாக இருக்கின்றன. வணிக மையங்கள், அரசு அலுவலகங்கள், பள்ளிக் கட்டடங்கள், நீதிமன்றங்கள் இருக்கின்ற காரணத்தின் அடிப்படையில், ஏற்கெனவே இருக்கின்ற சாலையை விரிவுபடுத்த இயலாத சூழலில், புறவழிச் சாலை ஒன்றை அமைப்பதற்கு மாண்புமிகு முன்னாள் முதலமைச்சர் எடப்பாடியார் அவர்கள் இருந்தபோது ஆய்வுப் பணிகள் நடைபெற்றன. ஆகவே, அந்தப் பணிகளை இந்த ஆண்டு நிறைவு செய்து, புறவழிச் சாலை அமைப்பதற்கு இந்த அரசு நடவடிக்கை மேற்கொள்ளுமா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. எ.வ. வேலு: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் அவர்கள் குறிப்பிடுகின்ற கோபிசெட்டிப்பாளையத்தைப் பொறுத்தளவிற்கு, நானும் அதிகம் அறிந்தவன்தான். ஏனென்றால், தமிழ்நாட்டிலிருக்கிற பெரும்பான்மையான திரைப்படத் தயாரிப்பாளர்கள் கோபிசெட்டிப்பாளையத்தை மையமாக வைத்து திரைப்படம் தயாரிப்பது அதிகமுண்டு. அந்தப் பகுதியில்*

அதிகமான கூட்ட நெரிசல்களும் உண்டு. எனக்கும் திரைப்படத் துறையில் அதிகம் அனுபவம் இருக்கின்ற காரணத்தினால், அதனை நான் அறிந்தவன்தான். அதனால்தான் ஒரு புறவழிச் சாலை அமைக்க வேண்டுமென்ற அடிப்படையில், இந்த அரசாங்கம் வந்தவுடனேயே ஈரோட்டையும், சத்தியமங்கலத்தையும் இணைக்கிற புறவழிச் சாலைக்கு, ஏறத்தாழ 8.6 கிலோ மீட்டர் தூரம் சாலை அமைப்பதற்காக தற்போது சாத்தியக்கூறு இருக்கிறதா என்ற அடிப்படையில் DPR தயார் செய்வதற்காக ரூ.70 இலட்சம் நிதியொதுக்கப்பட்டு, அந்தப் பணிகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. அது முழுமையடைந்தவுடனேயே மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் அனுமதியோடு, அந்தப் புறவழிச் சாலையை இந்த அரசாங்கம் கட்டாயம் அமைக்கும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் வாயிலாக மாண்புமிகு உறுப்பினருக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 224, மாண்புமிகு உறுப்பினர் திரு. இ.மா. மான்ராஜ், மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள்.

224—

நியாய விலைக் கடை

***21172—திரு. இ.மா. மான்ராஜ்:**

மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

ஸ்ரீவில்லிபுத்தூர் தொகுதி, பிள்ளையார்நத்தம் கிராமத்தில் முழுநேர நியாய விலைக் கடை அமைக்க அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. கேஆர். பெரியகருப்பன், கூட்டுறவுத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

விருதுநகர் மாவட்டம், ஸ்ரீவில்லிபுத்தூர் சட்டமன்றத் தொகுதி, பிள்ளையார்நத்தம் ஊராட்சியில் Spspl 32 பூவாணி தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுக் கடன் சங்கத்தின்கீழ் ஏற்கெனவே பிள்ளையார்நத்தம் முழுநேர நியாய விலைக் கடை செயல்பட்டு வருகிறது. ஆகவே, புதிதாக மேலும் ஒரு முழுநேர நியாய விலைக் கடை அமைக்க அவசியம் எழவில்லை.